**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S.No.34/2024**

**பி.வா.சா.1 - நாகலட்சுமி** **05.08.2025**

**குறுக்கு விசாரணை**

100 நாள் வேலை திட்டத்தில் தளபணிப்பொறுப்பாளராக நான் வேலை பார்த்து வந்தேன். தற்போது 1வருட காலமாக அந்த பணியை நான் செய்யவில்லை. எனக்கு கீழ் வேலை பார்ப்பவர்களுக்கு நான் தான் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றால் இல்லை. எனக்கு கீழ் சுமார் 50 நபர்கள் வேலை பார்ப்பார்கள். என்னிடம் பணி செய்பவர்களுக்கு நான் தான் பணிப்பதிவேடு பதிவு செய்து வந்தேன். அவர்களின் வருகையை எனது செல்போனில் பதிவு செய்து வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பி வைப்பேன். நான் பார்த்து வந்த தளப்பணியாளர் பணியினை எழுத்து அறிவு இல்லாமல் செய்யமுடியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 அடமான ஆவணத்தில் எனது கணவர் சசிகுமார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஈட்டுக்கடன் பத்திரம் 31.01.2020ல் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஈட்டுக்கடன் பத்திரத்திற்கு 2 ஆண்டுகள் தவணை என்றால் சரிதான். எனது மாமியார் நாயகம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது தாவா அடமான பத்திரங்களை பொறுத்து இல்லை என்றால் சரிதான். எனது கணவர் வா.சா.ஆ.3 ஈட்டுக்கடன் ஆவணத்தில் தவணை காலம் 2 ஆண்டுகள் முடிந்த பின்பு தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். ஏன் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் வாதியின் அறிவிப்பை பெற்றவுடன் எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டார். வாதியிடம் பெற்ற அடமானக் கடனை மோசடி செய்வதற்காக தான் எனது கணவர் காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. வாதியிடம் பெற்ற கடனை மோசடி செய்வதற்காக பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
மானாமதுரை